உ
குருபாதம்

Regd. No. M.

# ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

'சுபானு௵ ஆனிமீ — JULY 1943



1. திருஞ

2.

3.

4. ஏ.

இவ்வாதீனத்துக்குச் சொந்தமான
**திருத்துருத்தி ஆலய உட்பார்வை**

உன்னியெப் போது நெஞ்சு ளொருவனை யேத்துமின்னோ
கன்னியை ஒருபால் வைத்துக் கங்கையைச் சடையில் வைத்துப்
பொன்னியி னடுவு தன்னுட் பூம்புனல் பொலிந்து தோன்றுந்
துன்னிய துருத்தி யானைத் தொண்டனேன் கண்டவாறே.

—திருநாவுக்கரசு சுவாமிகள்.

பு எண். 55.

# திருவாரூர் நான்மணிமாலை

மூலமும் - வசனமும்

பிறந்தார்க்கு முத்தியாம் பேறுதவும் தலமாகிய திருவாரூர் தியாகேசப்பெருமானது அருட்டன்மைகளைத் தெளிவுபடக்கூறுவதும், குமரகுருபரரால் அருளிச் செய்யப்பெற்றதுமான இந்நூல் இப்போது ஆதீனத்து 55-ம் வெளியீடாக வெளியிடப்பெற்றுள்ளது. சென்னை திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள் எழுதிய [illegible]யது, இந்துமத அறநிலையப் பாதுகாப்புக்கழக [illegible]ன்ர் திருவாளர், செந்தமிழ்ப் புரவலர் கோவைகிழார் அவர்களது மதிப்புரையுடன் மிளிர்வது. கல்லூரி மாணவர்களுக்கு மிகுதியும் பயன்படுவது.

[illegible] அணா 2. தபாற்செலவு அணா 1.

கிடைக்குமிடம்:-

நூல்நிலையப்பரிசோதகர்,
தருமபுர ஆதீனம்
தருமபுரம், மாயவரம் P.O.

ஷ[illegible]ாப்,
இராஜாங்கக் கட்டளை
திருவாரூர் S. [illegible] R.

## கும்பாபிஷேகம்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஸ்ரீ பைரவர் ஆலயம் மிகவும் ஜீரணமாக இருந்தபடியால் முழுதும் இடித்துப் புதிய முறையில் திருப்பணிசெய்வித்து, ஸ்ரீகணநாதர், ஸ்ரீவீரசக்தி கணபதி ஆலயங்களும் பழுது பார்க்கப்பட்டு அவ்வாலயங்களுக்குச் சுபானு ஆண்டு வைகாசித் திங்கள் உ௩-ம் நாள் (6—6—43) அன்று ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தன்

மெய்கண்ட தேவ னருளாற் சிவாகம மெய்ப்பொருடேர்
தையமின் மெய்யடி யாருக் களித்ததை யாய்ந்தவர்போற்
பையவுள் வந்து பொருண்மாறு பாடு பகர்ந்தவர்க்கே
செய்ய பொருளவன் செப்பிய வாறிவண் செப்புதுமே.

—சித்தாந்த நிரூபணம்.


| மலர் 2 | சுபானு வரு ஆனி மீ JULY 1943 | இதழ் 8 |
|---|---|---|



இதழாசிரியர்:—

தருமபுர ஆதீனம், ஒடுக்கம் - சிவகுருநாதத் தம்பிரான்.


உள்ளுறை


1. திருஞானசம்பந்தர் தேவாரம்—
வித்துவான், திரு. மு. நடராஜ தேசிகர் அவர்கள்,
ஆசிரியர், தேவாரப் பாடசாலை, திருவிடைமருதூர். 271

2. நால்வர் தந்த தேவாரம்—
இலக்கண விளக்க பரம்பரை, வித்துவான்,
திரு. சோம. இராமலிங்க தேசிகர் அவர்கள்,
சென்னை. 277

3. உலகெலாம்—
வயிநாகரம், "பாலகவி" திரு. வே. இராமனுதன் செட்டியார்
அவர்கள், தேவகோட்டை. 280

4. சைவத்திருமுறைகள்—
வித்துவான். திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள்,
தமிழாசிரியர், கார்ப்பொரேஷன் உயர்தரப்பள்ளி,
சென்னை. 285

5. முப்பொருள்—

*வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள்,*
*தமிழ்ப் பேராசிரியர், அரசர் கல்லூரி,*
*திருவையாறு.* 289

6. **Sivaprakasam**—

Sri. K. Subramania Pillai, M. A., M. L. Avl.,
Annamalai University, Chidambaram. 293

# தருமபுர ஆதீன வெளியீடுகளின் விலைப்பட்டி

| | | விலை. | அஞ்சற் செலவு |
|---|---|---|---|
| | | அ. பை. | அ. பை. |
| 39 | புள்ளிருக்கு வேளூர்ப் புராணம் | 8—0 | 3—0 |
| 40 | சித்தாந்த சைவ வினாவிடை | 3—6 | 1—9 |
| 41 | நால்வர் சரித்திரமும், அற்புதத் தேவாரத்திரட்டும் | 2—0 | 1—3 |
| 42 | ஆச்சாள்புரம் கோயில் வரலறு | 1—6 | 0—9 |
| 43 | திருவையாற்றுக் கோயில் வரலாறு | 2—6 | 0—9 |
| 48 | திருக்கடவூருலா (குறிப்புரையுடன்) | 4—0 | 1—9 |
| 51 | சீகாழித் தலவரலாறு | 2—9 | 0—9 |
| 52 | மெய்கண்ட சாத்திரம் | 8—0 | 3—0 |
| 53 | திருக்கற்குடித் தலவரலாறு | 3—6 | 0—9 |
| 54 | நீதிநெறிவிளக்கம் | 8—0 | 4—3 |
| 55 | திருவாரூர் நான்மணிமாலை | 2—0 | 1—0 |

இப்புத்தகங்கள் வேண்டுவோர் அடியிற்கண்ட முகவரிக்கு முன் பணமனுப்பிப் பெற்றுக் கொள்ளவும். எல்லோரும் எளிதில் பெற்றுப் படித்துணரவேண்டுமென்ற கருத்தில் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படுவதால் மணியார்டர் மூலமாவது, தபாற்றலைகள் மூலமாவது அஞ்சற்கூலி உள்பட அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

முகவரி:- **நூல்நிலையப்பரிசோதகர்,**
தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயவரம் P.O

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

# ஞானசம்பந்தம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க வாடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியிறைய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (திருஞா-தே)

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்தர் தேவாரம்

திரு என்பது அடைமொழியாகும். ஞானசம்பந்தர் என்னுந் திருநாமம் மதுரையம்பதியில் திருஞானசம்பந்தர் எழுந்தருளியிருக்கும் திருமடத்தில், சமணர்கள் தீயிட்டபொழுது அத்தீ யிடுதற்கு அரசனே காரணமாயிருந்தமையால், சம்பந்தர் "பையவே சென்று பாண்டியற் காகவே" என்று முடியும் திருப்பாசுரம் அருளிச்செய்து தீயினைப் பாண்டியனிடமே செலுத்த அது பிணியாகப் பற்றியது. சமணர்கள் செய்த மணி மந்திர ஔடதங்களால் அனலில் நெய் பெய்தாற்போல அத்தீப்பிணி அதிகரிக்க அரசனுந் துயருற்றான்.

இஃதறிந்த பங்கயச் செல்வியாம் பாண்டிமாதேவியும், அடியவரைக்காணின் குணங்கொடு பணியுங் குலச்சிறையாராம் அமைச்சரும், அறிவிக்கின்றார்கள்; என்னையெனின், திருஞானசம்பந்தர் நமது நகரில்

எழுந்தருளியுள்ளார்; அவர் இவ்விடம் எழுந்தருளில் இந்நோய் மாத்திரமன்றி பிறவிநோயுந்தீரும் என்றார்கள். ஞானசம்பந்தர் என்னும் ஆசார்ய பஞ்சாக்ஷரம் அரசன் செவியுற்றபோது, அவனுக்கு அந்நோயினுலுற்ற சோர்வு அப்பொழுதே அகன்றது. "மீனவன் செவியினூடு மெய்யுணர் வளிப்போர்கூற, ஞானசம்பந்தரென்னு நாம மந்திரமுஞ் செல்ல, ஆனபோ தயர்வு தன்னையகன்றிட" என்பது அருள்மொழி. மந்திரோபதேசஞ் செய்கின்றவர்களும் தக்காராயிருத்தல் வேண்டுமென்பதுபற்றியே மெய்யுணர்வளிப்போர்கூற என்றார். அஃதன்றியும் இதுவரையில் பொய்யுணர் வளிப்போர் கூட்டத்தினைதலானும் என்க.

ஏ மங்கள சொரூபமானவளே! உனது திருவுள்ளத்தில் தழைத்த பாலமுதூறின் சிவந்த தனங்களில் அது பெருங்கவியென்னும் அலைகள் பொருந்திய நெடிய கடலாகும். கவுணியர் குலத்துதித்த குழந்தை யென்னும் மேகம் அப்பாலை உண்டு, பொருள் நயம் பொருந்திய கவிதை யென்னும் பரிசுத்தமான மழையைப் பொழிந்தது. (சிவானந்தலகிரி)

சிவபெருமான் திருமுறையில் எவ்வித விருப்புடையர் எனின்? காமுகனுக்குத் தன்னால் விரும்பப்பட்ட இளம்பாவையர் வாய்ச்சொல்லில் எவ்வளவு விருப்பமோ அதுபோல, தன்னால் அருளிச் செய்யப்பட்ட வேதசிவாகமங்களைக் காட்டிலும் திருமுறையில் மிக்க விருப்புடையர்.

### மனதிற்கு உபதேசம்

"நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய வன்புசெய்வோ மடநெஞ்சே யரனாமம்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளி
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே"

"நீநாளு நன்னெஞ்சே நினைகண்டா யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளு நவின்றேத்தப் பெறலாமை நல்வினையே"

இவைபோன்ற பல பாசுரங்களை நோக்கி உய்த்துணர்ந்து கொள்க.

## மக்களுக்கு உபதேசம்

"காலினோடு கைகளுந் தளர்ந்துகாம நோய்தனால்
ஞாலவார் குழலினா ரிகழ்ந்துரைப்ப தன்முனம்
மாலினோடு நான்முகன் மதித்தவர்கள் காண்கிலா
நீலமேவு கண்டனார் நிகழ்ந்தகாழி சேர்மினே"

"முன்னைநீர்செய் பாவத்தான் மூர்த்திபாதஞ் சிந்தியா
தின்னநீரி டும்பையின் மூழ்கிநீ ரெழும்மினோ
பொன்னைவென்ற கொன்றையான் பூதம்பாட வாடலான்
கொன்னவிலும் வேலினான் கோடிகாவு சேர்மினே"

இவைபோன்ற பாசுரங்களை நோக்கி அறிக.

நமது கண்கள் சிவபெருமானைத் தரிசிக்காமல் ஏனைய பொருள்களை யெல்லாம் நன்றாகக் காணினும் காணாத கண்களே என்பதை "ஆமாத்தூர் அம்மானைக் காணாத கண்ணெல்லாங் காணாத கண்களே" என்றும், நமதுநா சிவபிரான் புகழைக்கூறாது ஏனைய விஷயங்கள் எவற்றைக் கூறினுங் கூறாதநாவென்பதை "கூறாத நாவெல்லாங் கூறாத நாக்களே" என்றும், நமது செவி உலகவிஷயங்கள் எவ்வளவு கேட்பினும் சிவபிரான் புகழைக் கேளாவிடின் கேளாச்செவி யென்பதைக் "கேளாச் செவியெல்லாங் கேளாச் செவிகளே" என்றும் இன்னும் பலபடத் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

"கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி"

என்றார் திருவள்ளுவரும்.

இனி, அப்பெருமானை வாயாரப் பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடுவதற்குப் புண்ணியஞ்செய் திருத்தல் வேண்டுமென்பதை,

"என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே"

என்ற திருப்பாடலால் அருளிச்செய்துள்ளார்.

## சரிதங்கள் காணப்படும் சில இடங்கள்

"யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளும் ஒழியாமே
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே"

என்றதால் சம்பாதி சடாயு சரிதமும்,

"வந்தமண லாலிலிங்கம் மண்ணியின்கட் பாலாட்டும்
சிந்தைசெய்வோன் றன்கருமந் தேர்ந்துசிதைப் பான்வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே"

என்றதால் சண்டீசர் சரிதமும் உணரலாம். நமிநந்தியடிகள் சரிதம்,

"நாவியல்சீர் நமிநந்தி யடிகளுக்கு நல்குமவன்"

என்ற பகுதியானும், கண்ணப்பர் சரிதம்,

"ஊனொடுண்டல் நன்றெஎன ஊனொடுண்டல் தீதெஎன
ஆனதொண்ட ரன்பினாற் பேசநின்ற தன்மையான்"

என்ற பகுதியாலும் சுவாமிகள் நமக்கு அறிவிக்கின்றார்கள்.

சிவபெருமான் தமிழ்ச்சொல், வடசொல் இரண்டினும் விருப்புடையரென்பது "தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழற்சேர, வம்மலர்க்கொன்றை அணிந்த வெம்மடிகள் அச்சிறு பாக்கம தாட்சிகொண்டாரே" என்ற பகுதியானுணர்க.

### சோதிடம்

"விலங்கலமர் புயன்மறந்து மீன்சனிபுக் கூன்சலிக்குங் காலந்தானும், கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய மெய்யர்வாழ் கழுமலமே" என்ற பகுதியில் சோதிடக்கருத்து அமைந்திருத்தல் காண்க.

### அகப்பொருட்டுறைகள்

"சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதாளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் றிருநாம மெனக்கொருகாற் பேசாயே"

என்ற அப்பதிக முழுவதும் அகப்பொருட்டுறைகள் பற்றியனவேயாம்.

### சித்திர கவிகள்

மொழிமாற்று, சக்கரமாற்று, கோமுத்திரி, கூடசதுக்கம், மாலைமாற்று இவைகள் சிறப்பாக ஞானசம்பந்த சுவாமிகளது பதிகங்களிற் காணலாம்.

### சிறப்பெழுத்து

"ஒழுகலரி தழிகலியில் உழியுலகு பழிபெருகு வழியை நினையா" என்ற பாசுரத்தில் இருபத்தொரு ழகரங்கள் அமைந்துள்ளன.

### ஓதினாற்பயன்

ஞானசம்பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்து இசைகற்று வல்லார் சொலக் கேட்டுகந்தவர் தம்மை
வாதியாவினை மறுமைக்கு மிம்மைக்கும் வருத்தம்வந் தடையாவே'

என்றும்,

"சம்பந்தன் பரிந்துரைத்த பத்துமேத்தி, யின்னிசையாற்
பாடவல்லா ரிருநிலத்தி லீசனெனு மியல்பினோரே"

என்றும்,

"ஒருத்தராகிலும் பலர்களாகிலும் உரைசெய்வார் உயர்ந்தார்களே"

என்றும் பணித்தருளியுள்ளார்கள்.

"கோழைமிடறாக கவிகோளுமிலவாக இசைகூடும் வகையால், ஏழை யடியா ரவர்கள் யாவைசொன சொன்மகிழு மீசன்" என்றும் அருளியுள்ளார்கள்.

**சில அகச்சான்றுகள்**

"போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்"

என்றவிடத்து ஞானப்பாலுண்ட வரலாறும்,

"அத்தர் பியல்மேலிருந்து இன்னிசையா லுரைத்த பனுவல்"

என்றவிடத்து தந்தையார் தோண்மீதிருந்து பாடிய வரலாறும் அமைந்துள்ளன.

கவிக்குத் தருவன கண்ணுக் கினியன கேட்கிலின்பஞ்
செவிக்குத் தருவன சிந்தைக் குரியன பைந்தாள
நவிக்கட் சிறுமியர் முற்றின் முகந்துதஞ் சிற்றில்தொறுங்
குவிக்கத் திரைபரக் குங்கொச்சை நாதன் குரைகழலே.

உறவும் பொருளுமொண் போகமுங் கல்வியுங் கல்வியுற்ற
துறவுந் துறவிப் பயனும் எனக்குச் சுழிந்தபுனற்
புறவும் பொழிலும் பொழில்சூழ் பொதும்புந் ததும்பவண்டின்
நறவும் பொழிலெழிற் காழியர் கோன்றிரு நாமங்களே.

வித்துவான், மு. நடராஜ தேசிகர்,
ஆசிரியர், தேவாரப்பாடசாலை, திருவிடைமருதூர்.

---

சித்திரபானு ஆண்டு ஆவணிமூலத்திருநாள் 21-8-42 அன்று நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

குருபாதம்

# நால்வர் தந்த தேவாரம்

(வித்துவான், திரு. சோம. இராமலிங்க தேசிகர் அவர்கள், சென்னை.)

தேவாரம் என்பது இதுவரையில் மூவர் பாடியது என்றுதான் யாவருங்கூறுவர். இப்போது "நால்வர் தந்தது" என்று கூறுதல் வியப்பன்றோ? மூவர் பாடிய தேவாரம் என்று கூறுவதில் ஒருவித ஆட்சேபமும் இல்லை. ஆனால் இந்த மூவரும் பாடுவதற்கு நான்கு பெண்மணிகள் பெருங்காரணமாக இருந்தார்கள். அந்த நான்கு பெண்மணிகள் இல்லையேல் தேவாரம் தோன்றியிராது என்று கூடக் கூறலாம். அதுபற்றிச் சிறிது ஆராய்வாம்.

முதலில் நமது திருநாவுக்கரசு சுவாமிகளை எடுத்துக் கொள்வோம். அவர் முதன் முதலில் சமண மதத்தைச் சார்ந்து அரசனால் அமைச்சர் பதவியும், "தருமசேனர்" என்ற பட்டமும் கொடுக்கப் பெற்றுச் சமண மதத்திலேயே இருந்தார். அவருடைய தமக்கையாகிய திலகவதியார் தனது இளவல் சமண மதத்தைச் சேர்ந்து அம்மதத்திலேயே இருந்து வருவதைக் கண்டு வருந்தி திருவதிகை இறைவனிடஞ் சென்று எவ்வாறாயினும் தன் இளவலை அம்மதத்தினின்றும் மறுபடியும் சைவ சமயத்திற்குக் கொண்டுவந்து சேர்க்கும்படித் தினந்தோறும் இறைவனை வேண்டிவந்தார். இவரது வேண்டுகோட்கிணங்கி அதிகை யெம்பிரானும் மருணீக்கியாருக்குச் சூலை நோயைக் கொடுத்தருளினார். அந்நோயைப் போக்க அவர் பலவகைகளிலும் முயன்றும் ஒன்றும் பயனில்லாமற் போயின. இறுதியில் தன் தமக்கையாரை அடைந்து அவரிடம் கூறினால் ஏதாவது வழிபிறக்கும் என்று நினைத்து, அவரிடஞ் சென்றார். அவரும் இவரை அன்புடன் அழைத்துச் சென்று அதிகை எம்பெருமான்முன் ஐந்தெழுத்தோதி

திருநீறும் கொடுத்து "மனம், வாக்கு, காயம் என்கின்ற மூன்றினலும் தொண்டு செய்வாயாக" என்று உபதேசமும் செய்தார். அதன்படியே நமது அப்பர் சுவாமிகளும் மனத்தினல் இறைவனை நினைத்து, வாக்கால் அவரைப்பாடி, காயத்தால் உழவாரப் பணிவிடையும் செய்துவந்தார். தமக்கையார் காட்டிய அன்பாலும், அவர்செய்த உபதேசத்தாலும் பாடுதலை ஒரு தொண்டாகக் கொண்டார். இறைவனும் இவரது பாடலுக்கு வியந்து "நாவுக்கரசன்" என்ற பெயருங் கொடுத்தார். நமது திலகவதியார் இல்லையானல், நமது திருநாவுக்கரசுசுவாமிகள் சைவசமய குருவாக எவ்வாறு விளங்கி இருக்கமுடியும். நாம் அவரை இப்போது தாண்டகவேந்து என்று எங்கே புகழ்வது! நிற்க,

அடுத்தபடி சீகாழிப் பதியிலே பிறந்த சம்பந்த சுவாமிகளை எடுத்துக்கொள்வோம். அவர்கள் அப்பர் சுவாமிகளுடன் திருமறைக் காட்டிற்குச் சென்று அடைத்திருந்த கதவைத் திறக்கச்செய்து இறைவனைக் கண்டு ஆனந்தங்கொண்டு அங்கே தங்கியிருந்தார்கள். இவ்வாறிருக்க, "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்றவாறு அக்காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட கூன்பாண்டியனும், அவனது குடிகளும் சமண மதத்தைச் சார்ந்து ஒழுகிவந்தனர். ஆனல் பாண்டியன் மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் அவ்வழிச் செல்லாது சைவ சமயத்திலேயே இருந்துவந்தனர்.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருமறைக் காட்டில் கதவு திறக்கப் பாடியசெய்தி குலச்சிறையாருக்கும், மங்கையர்க்கரசியாருக்கும் எட்டியது. தூதரையனுப்பிப் பாண்டிய நாட்டின் நிலைமையைக் கூறி, சுவாமிகளை யழைத்துவர ஏற்பாடு செய்தனர். அவர்களுடைய வேண்டுகோட்கிணங்கி மதுரையம்பதியை யடைந்து பல அற்புதங்களைச் செய்தனர். பாண்டியன் நோயை

யும் போக்கி, அவனது கூனையும் போக்கிச் சைவ சமயத்தைச் சாரும்படிச் செய்தார்.

தமது மங்கையர்க்கரசியார் சுவாமிகளை மதுரைக்கு அழைத்ததா லன்றோ சமணர்களோடு பலவாதங்களில் வெல்லவும், சைவசமயத்தை நிலைநாட்டவும், பாண்டிய நாட்டுப் பதிகடோறுஞ் சென்று பாடவும், அழகிய பதிகங்கள் பல நமக்கு அருளவும் மிகப் பெரியதோர் வாய்ப்புக் கிடைத்தது. அடுத்தபடியாக, சுந்தரமூர்த்தி சுவாமிகளை எடுத்துக்கொள்வோம். அவர் கயிலையில் ஆலாலசுந்தரன் என்றபெயருடன் சிவபெருமானுக்குத் தொண்டு செய்து வருங்கால் ஓர்நாள் பார்வதிதேவி யின் தோழியர்களாகிய அனிந்திதை, கமலினி என்ற இருவரும் நந்தனவனத்தில் பூக்கொய்யும் போது சுந்தரர் அவர்களை விரும்பினார்.

இதனையறிந்த பெருமான் சுந்தரரை நோக்கி "நீ பூலோகம் சென்று, காதலிக்கப்பட்ட இருவரையும் மணந்து இல்வாழ்க்கை நடத்தி நம்மை வந்து அடைவாய்" எனக் கட்டளை யிட்டருளினர். தோழிமார்கள் இருவரும் பரவையார், சங்கிலியார் என்ற பெயருடன் அவதரித்தனர். சுந்தரரும் ஆதிசைவகுலத்திலேபிறந்து அவ்விருவரையும் மணந்தார். அவ்விருவர் பொருட்டும் சுந்தரர் இறைவனிடம் நெல், பொன், வாசனைப் பொருள்கள் முதலியவற்றிற்காகப் பல பாடல்கள் பாடினர். "நீளநினைந்தடியேன்" என்ற பதிகமும், "பத்தூர்புக் கிரந்துண்டு" என்ற பதிகமும் மேற் கூறியவற்றை வலியுறுத்தும்.

இதுகாறுங் கூறிவந்த பற்பல காரணங்களால் நம்முடைய அரும் பெரும் செல்வமாகிய தேவாரத் திருமுறைகளைப் பாடுவதற்குத் **திலகவதியார், மங்கை யர்க்கரசியார், பரவையார், சங்கிலியார்** என்ற நான்கு பெண்மணிகளும் காரணமாவார்கள் என்று கூறுவது தவறாகாது.

குருபாதம்

# உலகெலாம்

[''பாலகவி'' திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்.]

சொல்லரும் புகழாளர்களாகிய தொண்டர்களது வரலாறு கூறும் பெரியபுராணமென்கின்ற பெருங் காப்பியம் செய்ய வந்த ஆசிரியர் சேக்கிழார்பெருமான், முதற்கண் அந்நூல் முட்டின்றி இனிது முடிதற் பொருட்டுக் கடவுள் வணக்கம் கூறுகின்றார். வணங்கப் பெறுகின்ற கடவுள் அம்பலத்தாடும் அண்ணல். பரம் பொருளாகிய பெருமான் உலகத்துப் பொருள்கள் அனைத்திலும் ஒன்றியிருக்கும் பேராற்றல் படைத்தவனேனும் சிறப்பாகத் திருக்கோயில்களினிடத்தும், சிவவேடத்தினிடத்தும் வெளிப்பட்டு விளங்குவனென்பது சிவஞானபோதத்தின் முடிபாகும். அங்ஙனமாக அவ்வண்ணலார் அமருங் கோயில்கள் பல. அவற்றுள் தலை சிறந்ததாக, **கோயில்** என்றபெயரைத் தன்னதாகக் கொண்டு விளங்குவது தில்லையம்பதியாகும்.

அங்குத் தாண்டவம் புரியவல்ல தம்பிரானார் அத் தாண்டவத்தால் உலகை இயக்கிக் கொண்டிருக்கிறார். அத்தாண்டவம் ஓய்வுறுமேல் உலக இயக்கமும் ஓய்வுறும். அவரது திருக்கூத்து உலகிற்கு இன்றியமையாது வேண்டப் பெறுவனவாய ஐந்தொழில்களையும் ஆற்றிக்கொண்டிருக்கிறதென்று உண்மை விளக்கம் கூறுகின்றது. அது,

> ''தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பில்
> சாற்றியிடு மங்கியிலே சங்காரம் —ஊற்றமா
> ஊன்று மலர்ப்பதத்தே யுற்றதிரோ தம்முத்தி
> நான்ற மலர்ப்பதத்தே நாடு''

என்பதாகும். ஆடற் பெருமானை வாழ்த்தி வணங்கு

தற்கு, அவனது திருவாய்மொழி முதற்கண் நின்று துணைசெய்கின்றது. செய்யுள்,

> "உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
> நிலவு லாவிய நீர்மலி வேணியன்
> அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
> மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்"

என்பது. "அம்பலத்து ஆடுவான் உலகெலா முணர்ந்து ஓதுதற்கு அரியவனாகவும், அலகில் சோதியனாகவும் விளங்குகின்றான்; அவனுடைய திருவடிகள் மலர்ந்திருக்கின்றன; சிலம்புகளை அணிந்திருக்கின்றன; அவைகள் வாழ்த்துதற்கு உரியன. வணங்குதற்கு உரியன" என்பதே வெளிப்படையாகக் காணும் பொருளாம்.

'உலகம்' என்பது அறிவுடைப் பெருமக்களைக் குறிக்கும் ஒருசொல். இயங்கியலும், நிலையியலுமாகிய பொருள்களைத் தன்னகத்துக் கொண்டிருப்பினும், அறிவுடைப் பெருமக்களையே, 'உலகம்' என்ற சொல் குறிக்குமென்பதை "உலகமென்ப துயர்ந்தோர் மாட்டே" என்பதாலறியலாம். "உலகம் என்பது பல பொருளொருசொல்லாய் நிலத்தையும், உயிர்களையும், ஒழுக்கத்தையும் உணர்த்திநிற்குமேனும் ஈண்டு 'உவப்ப' என்றதனான் மண்ணிடத்து வாழும் சீவான்மாக்களை உணர்த்திற்று*" என்பதுங் காண்க.

ஆகவே, உலகெலாம் என்பது எல்லாவுலகத்திலுமுள்ள அறிவுடையவர்கள் என்ற பொருளைத் தருகின்றது. மனம், மொழி, மெய் என்ற மூன்றனுள் மனமும் மெய்யும் உணர்தற்கும், மொழி ஓதுதற்கும் கருவிகளாக உள்ளன. மெய்யால் உணரமாட்டாத சில பொருள்களை மனத்தாலும், மனத்தால் உணரமாட்டாத சில பொருள்களை மெய்யாலும் உணர்தல்கூடும். இவ்விருவகையினும் உணர்தற்கெட்டாத பொருள்

* முருகாற்றுப்படை, நச்சரர் உரை.

இறைவனொருவனே. புறத்திலும் அகத்திலும் உணர்தல்கூடாத ஒருபொருளை ஓதுதல் எவ்வாறு இயலும்? எனவே எவ்வெவர் எத்தன்மையுடையானெனக் கூறினும், அவ்வவர் கூற்றுக்களுக் காதரவளித்து அதற்கப்பாலும் வேறுபல மேன்மையுடன் விளங்குபவன் இறைவன் என்பதை இங்குக் காணலாம்.

உலகெலாம் உணர ஓதற்கரியவன் என்னது உணர்ந்து ஓதற்கரியவனென்றமையால், உணரமுடியாத சேணெடுந் தூரத்திருக்கின்றானென்று உயிர்கள் மலைவுகொள்ள வேண்டுவதில்லை. உணர்ந்தாரை ஓதுதற்கரிய நிலையில் பேரின்பத்துட் டிளைக்குமாறு செய்துவிடுகின்றான் என்பதே இங்குக் காணவேண்டிய உண்மையாகும். இதனையே, 'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்' என்னும் பழமொழியும் வலியுறுத்துகின்றது.

வினைவயப்பட்ட உயிர்கள் உணரவும் ஓதவும் அரிய பெற்றியை உடையான் இறைவனென்பதை, "எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர், பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்" என்ற அடிகளால் மணிவாசகப் பெருந்தகையார் குறிக்கின்றார். மேலும்,

"சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன்"

என்பதும் அறியத்தக்கது.

எனவே வினைவயப்பட்ட உயிர்களின் உணர்ச்சிக் கப்பாற்பட்டு, வினைநீங்கிய உயிர்களின் உணர்வில் தங்கி, அவ்வுயிர்களாலும் ஓதுதற்கரிய பெருந்தகைமை யுடையானென்பதைக் குறிக்கவே "உணர்ந்தோதற்கரியன்" என ஆசிரியர் கூறினர். வினை நீங்கப்

பெருது அருளடைதற்குப் புறம்பா யிருப்போர்க்கு இறைவன் சேய்மையி லிருக்கின்ரு னென்பதைப் "புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க" என்ற மணிவாசகம் அறிவிக்கின்றது.

இனி, உலகத்தார் உணர்ந் தோதற்கரிய ஒரு பொருளைப்பற்றி ஏன் பெருமை பேசுதல் வேண்டு மென்று தோன்றுகின்றது. மனத்தாலும் காணமுடியாத பொருளால் மக்களுக்கு உண்டாகும் நலமென்னை யென்று கேட்கின்ற மதியாளர்கள் இக்காலத்துக் காணப்படுகின்றன ரன்ரே? அவர்களுக்கு விடை கூறுவார்போல அடுத்த அடியை அமைத்திருக்கின்ரூர் ஆசிரியர் சேக்கிழார். ஆயும் நுண்பொருளாகியும், 'வெளியே அம்பலத்துள் நின்று ஆடுதலும், 'தன்னடைந்தார்க் கின்பங்கள் தருவானை' என்றபடிவழிபட்டார்க்கு அளவற்ற நலன்களைத் தருதலும் அவனது இயல்பு. எனவே வாக்கு மனதீதனை அவனை வாழ்த்துவதாலும், வணங்குவதாலும் வரும்பய னென்னையென ஐயமுறல் வேண்டா. உயிர்களது வழிபாட்டிற்கேற்ற பயனைத், தனது பெருந்தகைமைக்கு இழிவு வரத்தக்க தேனும் தந்தே தீருவ னென்பதை விளக்கவே 'நிலவுலாவிய நீர்மலி வேணியன்' என்று கூறினர்.

கலைக்குறைவால் துன்புற்ற நிலவின் அடைக்கலத்தை யேற்று அருள்செய்ததோடன்றி, அந்நிலவைத் தாழ்ந்தறியாச் சென்னியிலும் தாங்கி நிற்கின்ருனெனில், அவனது பேரருட்டிறமும் ஆன்மாக்கள் வழிபாட்டாற் பெறும் பேரின்ப உண்மையும் புலப்படுத்தற்கு வேறு சான்றும் வேண்டுமோ? மேலும், உணர்தற்கும் ஓதுதற்கும் அரியானென்ற அருமையை எளிமையாக்குதற்கே நிலவால் ஒளிசெய்து நிற்கின்ருனென்ற குறிப்பும் காணத்தக்கது. பொருள்களைக் காணுதற்கு ஒளிவேண்டுமன்ரே?

"நீர்மலிவேணியன்" என்றது இறைவனது பேராற்றலைக் குறிக்கும். மக்கள் செய்கின்றபொழுது ஒருவகையான பயனைத் தருகின்ற செயல், இறைவனாற் செய்யப்படுகின்றபொழுது அதற்கு மாறான பயனைத் தருதல் அறியத்தக்கதொன்றாகும். ஒருகுடத்துநீரை நிலைநிற்கச் செய்யவேண்டுமாயின் அக்குடம் சிறிதும் பொள்ளலின்றி அமைந்திருக்க வேண்டும்; ஈர்க்கும் நுழையாச் சிறுபொள்ளல் ஒன்றிருப்பினும், இட்ட நீரைச் சிறிது நேரத்தில் விட்டுவிட்டுக் குடம் மட்டுமே காணப்படும். நீர் நிற்பதற்கே சிறு பொள்ளலும் அற்ற குடம் வேண்டுமாயின், காற்றைப் பிடித்தடைக்க எத்தகைய பாண்டம் வேண்டப்படுமென்பதை எண்ணிப் பாருங்கள்!

காற்றடைக்கப் பொள்ளலற்ற பாண்டம் தேடுவது மக்கள் செயல். இறைவன் செயலோ இதற்கு நேர் மாறானது. ஒன்பது பெரிய பொள்ளல்களையுடைய பாண்டம். அப்பொள்ளல்கள் திறந்திருக்கும்போது காற்று அப்பாண்டத்துள் தங்கியிருக்கின்றது. பொள்ளல்களை அடைத்தாலோ அக்காற்று வெளியேறி விடுகின்றது. இதனை அப்பரடிகள், "ஒண்ணுளே யொன்பது வாசல் வைத்தாய் ஒக்க வடைக்கும்போ துணர மாட்டேன்" என்று கூறுகின்றார். ஆகவே, மக்கட் செயலுக்கு வேறுபட்ட செயலையுடைய பேராற்றல் இங்கே காணப் பெறுகின்றது.

பெருகிய வெள்ளநீரை, நுண்ணிய நொய்ய மயிர்களினாலாகிய சடையில் நிற்கவைத்த பேராற்றல் வேறெவருக்கு மில்லை. "நில்லாத நீர்சடைமே னிற்பித்தானை" என்று அப்பரடிகள் கூறுகின்றார். நீர் மறைந்திருப்பினும் நிறைந்த நிலையிலேயே அடங்கியிருக்கின்றதென்பதைக் காட்ட "நீர்மலி வேணியன்" என்றனர். இங்கு அடைக்கலம் புகுந்தாரைக் காக்கின்ற அறக் கருணையையும், அகந்தையுற்றாரை அடக்குகின்ற மறக்கருணையையும் விளக்கவே நிலவையும் நீரையும் உடன் கூறினர். (வரும்)

சிவமயம்

# சைவத் திருமுறைகள்

[வித்துவான், திரு. வை. குஞ்…பாதம் அவர்கள், சென்னை.]

(258-ம் பக்கத் தொடர்ச்சி)

## திருமுறைகளின் முறைவைப்பு

திருஞானசம்பந்தப் பெருமான் மூன்று வயது குழந்தையாயிருக்கும்போதே, உமையம்மை தந்தருளிய ஞானப்பாலுண்டு ஞானசம்பந்தம் பெற்றுச் செயற்கருஞ் செயல்கள் பல செய்த சிறப்புக்கருதி அவர் பாடல்களை முன்னும்*, அவர் காலத்திருந்த திருநாவுக்கரசுசுவாமிகள் பாடல்களை யதன்பின்னும், அவருக்குப் பிற்காலத்தில் தோன்றிய சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடல்களை அதன் பின்னும் முறைப்படுத்தி வைத்தனர் எனக்கூறுதல் ஒருவாறு பொருந்தும். இம்முறை பண் முறைபற்றி வகுக்கப்பட்டதெனக் கூறுவாருமுளர். இம்மூவர்பாடியருளிய தேவாரப்பதிகங்களே ஆதியில் அடங்கன்முறையென வழங்கப்பட்டது. இதனை அகத்தியர் தேவாரத்திரட்டின் பாயிரஅகவலில்,

* * *

"தீதிலா அகத்தியத் திரட்டினை உலகில்
ஓதினர் அடங்கலும் ஓதினர் ஆவரே"

எனவரூஉம் ஈற்றடிகள் இரண்டினாலும் அறியலாம்.

பன்னிரு திருமுறைப் பாடல்களும் காலவரையறை பற்றி வகுக்கப்படவில்லையாகலின், தேவாரம் பாடிய மூவருக்கும் முற்பட்டவராகிய மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய திருவாசகமாகிய தேனையும் திருக்கோவையாரையும் எக்காரணங்கருதியோ, தேவார

---

* ஆராய்தற்குரியது.

ஆசிரியர்கள் காலத்திலேயே, தேவாரத்திருமுறைகளின் முன்னே பின்னே சேர்த்து வழங்காமல், பிற்காலத்தில் அதனை எட்டாந் திருமுறையாகச் சேர்த்தனர். இங்ஙனமாக அவ்வக்காலத்திருந்த அரசர்கள் ஆன்றோர்களின் விருப்பத்திற்கும் அன்பிற்கும் ஏற்றவகையால் மற்றைத் திருமுறைகளும் வகுக்கப்பட்டன எனக் கொள்க.

## திருமுறைகளின் சிறப்பு

பன்னிரு திருமுறைகளின் பெருமையினை அளவிட்டுக்கூற முடியாது. இவை தோத்திரமும், சாத்திரமும், சரித்திரமுமாக விளங்குகின்றன. இது சைவத் திருமுறைகட்கே உரிய தனிப்பெருஞ் சிறப்பாகும். திருமந்திரம் சாத்திரமாகவும், திருத்தொண்டர் புராணம் சரிதமாகவும், ஏனைய தேவாரம் முதலியன தோத்திரமாகவும் அமைந்துள்ளன என்பர் அறிஞர். சமய வாழ்வில் ஈடுபடும் ஒருவனுக்குச் சாத்திரம் சமய அறிவையும், தோத்திரம் பத்தியுணர்ச்சியையும், சரித்திரம் செயல் முறையில் தொண்டு செய்யும் ஆற்றலையும் ஊட்டவல்லன. எம்மதத்தினர்க்கும் இத்துணை விழுமிய கருத்துக்களையுடைய பதினெண்ணாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களமைந்த திருமுறைகளில்லையென்பது மிகையாகாது.

உலகில் தோன்றிய எம்மத வேதங்களுக்கு மில்லாத தனிய பெருந் தெய்வத்தன்மை நமது சைவத் திருமுறைகளாகிய தமிழ் வேதங்களுக்கு உண்டு. மற்றைச் சமயாசாரியர்களெல்லாரும் கடவுளை நேரே கண்டதாகத் திட்டமாக வலியுறுத்திப் பாடினாரில்லை. நமது சைவ சமயாசாரியர்களோ கடவுளை நேரே கண்கூடாகக் கண்டுபாடி செயற்கருஞ் செயல்கள் செய்துள்ளார்கள். இதற்கு அகச்சான்றுகளும், புறச்சான்றுகளும் திருமுறைகளில் மலிந்து காணப்படுகின்றன.

புறச்சான்றினும் அகச்சான்றே வலியுடைத்தென்பர் சரித ஆராய்ச்சியாளர். அவைகளில் இரண்டொன்று காட்டுதும்.

'உனக்குப் பால்கொடுத்தது யார்?' என வினவிய சிவபாதவிருதயர்க்கு மூன்றே வயதுடைய ஆளுடைய பிள்ளையார் தமக்குப்பால்கொடுத்து நேரே காட்சி யளித்து நின்ற சிவபெருமானுடைய தோற்றத்தை,

> "தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
> காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
> ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
> பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே"

என்று சுட்டிக்காட்டிப் பாடினார். எந்த உலகில் எந்தக் குழந்தை இங்ஙனம் மூவாண்டெல்லையில் இறைவனை நேரேகண்டு பாடியது? இது வியத்தகு தெய்வ நிகழ்ச்சியன்றோ! ஞானக்குழந்தை தமக்கு இறைவன் ஞானப்பாலளித்த செய்தியை "போதையார் பொற் கிண்ணத் தடிசில் பொல்லாதெனத் தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்" என்ற பாடலின் அடிகளில் குறித்துளார். அப்பர் சுவாமிகள் "கண்டே னவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என்று தாம் கடவுள் திருவடிகளைக் கண்டதைக் கூறி யுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்மை இறைவன் ஆட்கொண்டருளிய செய்தியை "அற்புதப்பழ ஆவணங் காட்டி அடியனாவென்னை ஆளதுகொண்ட நற்பதத்தை நள்ளாறனை" என்றும், 'எம்பெருமான் தோழனுமாய்' என்றும் விளக்கியுள்ளார். மாணிக்கவாசக சுவாமிகள் "நிலத்தின்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி" என்றும், 'கண்ணால் யானுங் கண்டேன் காண்க' என்றும், 'நனவே என்னைப் பிடித்தாட் கொண்டவா' என்றும், 'தானென்னை ஆட்கொண்ட தெல்லாரும் தாமறிவார்' என்றும் பற்பல இடங்களில் இறைவன் நேரே வந்து தம்மை ஆட்கொண்ட செய்தியைப்

புலப்படுத்தியுள்ளார். இங்ஙனம் கடவுளை நேரே கண்டு திருவருள் பெற்ற பெரியார்களே இறைவன் திருவருளைப் பெற விழைவார்க்கு வழிகாட்டுபவராவார்கள். அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய தெய்வப்பாடல்களாகிய திருமுறைகளே நமக்கு என்றும் இறைவன் திருவருளைப் பெறுதற்குப் பெருந்துணையாய் நிற்பன. திருஞான சம்பந்தப் பெருமான் தமக்குத் திருநல்லூர்ப் பெருமணத்தில், திருமணம் நிகழ்ந்த காலையில் திருமணங் காணவந்த எல்லோரையும், தாம் புகுந்த திருவருட் பெருஞ்சோதியில் அழைத்துச்சென்று பேரின்பப் பெருவாழ் வெய்தச்செய்த பெருஞ்செயலைப் பெரிய புராணத்துட்காண்க. இங்ஙனமே திருமுறைகளியற்றிய ஏனைய ஆசிரியர்களும் தத்தமக்கேற்ற துறையில் நின்று இறைவன் திருவருளைப் பெற்றுள்ளார்கள். இத்தகைய பெருமக்களைச் சமயாசாரியர்களாகவும் திருமுறையாசிரியர்களாகவும் பெற்ற பெருமையும், சிறப்பும் சைவத்தமிழ்மக்களுக்கன்றி வேறு யாவர்க் குள்ளது?

(வரும்)

இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டிறக்கஞ் செய்வான்—இறைவனே
எந்தா யெனவிரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தா லதுமாற்று வான்.

அருளே உலகெலாம் ஆள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தானல்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் என்ஞான்றும்
எப்பொருளு மாவ தெனக்கு.

—காரைக்காலம்மையார்.

குருபாதம்

# முப்பொருள்

[வித்துவான், திரு, இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள்,
அரசர் கல்லூரி, திருவையாறு.]

"திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்"

முப்பொருள் என்றது மூன்றாகிய பொருள் அல்லது மூவகைப்பட்ட பொருள் எனவிரியும். அம்மூன்று பொருளாவன பதியாகிய இறைப்பொருளும், பசுவாகிய உயிர்ப் பொருளும், பாசமாகிய கட்டுப்பொருளுமாம். இம் முப்பொருள்களின் இயல்களைத் தெரிப்பதே ஆகமங்களாம். ஆகமம் எனுஞ் சொற்குப் பொதுவாக நூலென்னும் பொருள் இருப்பினும் முப்பொருளுணர்த்துவது எனுஞ் சிறப்புப்பொருளே கொள்ளத்தக்கதாம். இம்மூன்று பொருளும் என்றுமுள்ளன. என்று மழியாதனவாம் என்பது பொதுவியலாம் (அநாதி நித்யங்கள்). பொருள் என வாளாகூறின் நாற்பொருளாகிய அறம் பொருள் இன்பம் வீடு ஆயவற்றினையும், அகப்பொருள் புறப்பொருளினையும் உணர்த்தும். இவற்றினும் அதுவேறென்று அறிதற்பொருட்டே முப்பொருளென அடைகொடுத்துக் கூறினேம். பொருளாவது மனனுணர்வாற் பற்றற்குரிய பேறு எதுவோ அதுவே பொருளெனப்படும். அப்பொருள் விடயப் பொருளாகலாம்; உணர்வுப்பொருள் ஆகலாம்; அருவப்பொருளாகலாம். திருக்குறள் முதலாய நூல்கள் நுவலும் முப்பொருட்கும் இப்பொருட்கும் வேற்றுமை பெரிதும் உண்டு.

---

இக்கட்டுரை திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் 15—10—42 அன்று நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

இறைவனால் மக்கட் கருளப்பட்டவையாகும் கல்வியாலுஞ் செல்வத்தாலும் எய்தப்பெறுவது. மலர்தலையுலகிற் பலநூலாய்ந்து செய்வதுந் தவிர்வதும், பெறுவது முறுவது உய்வதுமாகியவன்றோ உறற்பாலதாகின்றது என்ற மேலோர் வாக்கியங்களையும் மேவியாராய்தல் வேண்டும்.

ஈண்டுப் பேரின்பப் பொருளாகிய பதிப்பொருள் இயலும், பேரின்பப் பொருளைப் பேணியடைதற்குரிய உயிர்ப்பொருள்களின் இயலும் அப்பேரின்பப் பொருளை எய்தவொட்டாது தடைப்படுக்கும் பாசங்களாகிய கட்டுக்களுடைய இயலும் கலை நூல்களிலுள்ளவாறு சிலவற்றினை யாராய்வாம்.

உயிர்கள் வினை காரணமாக உடல்களைத் தாங்கியுலகத் துலாவுகின்றன. ஆண்டவன் ஆணையினால், உலகமாவது தோன்றிநின்று அழியுங் காரியமாயுள்ளது. இதனாலேயே உலகத்திற்குச் சகமெனப் பெயர் வந்தது என்பர்.

> "நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
> கலந்த மயக்க முலகம்"

என்பது தொல்காப்பியம்.

ஐம்பூதக்கலப்பாலாயது உலகம். உலகமொப்ப உடலங்களும் ஐம்பூதக் கலப்பேயாம். ஐம்பூதக் கலப்பென்பது எதனாலறியக்கிடக்கின்றது எனின், சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் அறிதற்கேற்ற கருவிகளுடைமையானும், அவை ஐம்பூதங்களுடைய தன்மையாம் ஆகலானும் அறியக்கிடக்கும் என்க. "ஐம்பெரும் பூதமெல்லாம் அடுக்கழிந் தழியும்" என்பது பிரபுலிங்க லீலை. ஆகவே உடலங்களும் அழிவுறுகின்றன. உடலகத்தின் உயிர்கள் அழிவுறுகின்றன வில்லை.

ஆகவே உடல்களை உயிர்கள் வினைகாரண மாக எடுக்கின்றன. அருட்பரமனாகிய ஆண்டவனே உலகத்துள்ளும் புறம்பும் உயிர்க்குள்ளும் நின்றுலாவு கின்றான். அவனாட்ட உலகம் அசையும். இறைவனைப் பாசம்பற்றா. பாசங்களோ அறிவற்றன. தனித்து நில்லாதன. உயிர்களொடு ஒன்றியிருப்பன.

இப் பொருளை யிம்முறையாற் கூறாது பசு பதி பாசம் என்றோ, பாசம் பதி பசு என்றோ, பாசம் பசு பதி யென்றோ, பசு பாசம் பதி யென்றோ கூற லாகாதா எனிற் கூறலாகாது. ஏனெனிற் கூறுதும்.

பசு பதி யெனின் ஒருபொருட்டாய்ப் பதிக்கடை யாகி விடும். பதி பாசம் பசு வெனின் பதியது பாச மெனப் பொருள்படும். பதியினைப் பாசமணுகா. பாசம் பசு வெனின் பாசத்திற்காக்க முண்டாய் அதுவே பற்றப் படுவது பசுவெனும் போதம் ஏற்படும். ஆகலின் பதியாவான் தனித்தும் உயிர்களோ டொன்றியு மிருப்பன் என்பதும், பசு பாசங்களோடொன்றி யிருக்கும் என்பதும், பாசம் தனித்திருக்கமாட்டா என் பதும் கருதியே பதி பசு பாசம் எனக்கூறியுள்ளனர்.

உயிர்கள் பிரமன்முதல் எண்ணில் கோடி யுள்ளன. அவ்வுயிர்களை முனைப்பித்தும், தொழிற்படுத்தியும், மயக் கியும் (ஆணவ கன்ம மாயைகளால்) வாட்டும் கட்டுக் கள் மூன்று. உயிர் தன் தன்மையினை (பசுத்தன்மை யினை) நீத்துப் பாசவலி கழலப்பெறின் பதித்தன்மை யினை யெய்தும். இறைவ னறுமலரடியிணையி னின்றும் பிரியாவாம்.

> "பசுப்பல கோடி பிரமன் முதலாய்
> பசுக்களைக் கட்டிய பாச மூன்றண்டு
> பசுத்தன்மை நீக்கியப் பாச மறுத்தாற்
> பசுக்க டலவனைப் பற்றி விடாவே."

என்பது பத்தாந் திருமுறை. சிவஞானபோத முதலிய முதல்வழிச் சார்பு நூல்கள் (சித்தாந்த நூல்கள்) இம் முப்பொருளைப்பற்றிப் பொதுவாகவும் சிறப்பாகவும் அளவை கண்டு அளந்துரையா நிற்கும். இவற்றினை யிறுதியிற் கூறுவம்.

**பதியின் இயல்:—** அளித்திடல், காத்திடல், அடுதல், மெய்யுணர் வொளித்திடல், பேரருளுதல் (சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகம்) எனும் ஐந்தொழில் ஆடல்புரிபவன் எவனோ? அவன்றான் நீலமார்மிடற் றினன், கயிலைநாயகன், ஆளுநாயகன், பதியெனப் பழமறை பகராநிற்கும். இப்பதியை; பரம்பொருள் இயவுள், கடவுள், இறைவன், பரசிவம், மூவுருவகன்று முதல்வன் என நூல்கள் பலபெயரிட்டழைக்கும். ஒரு நாமம், ஓருருவம், ஒன்றுமிலான் எனத் திருவாசகஞ் கூறும். மேற்குறித்த வாடல்கள் உயிர்கள் பொருட்டே யாம். பதியாகிய தன்பொருட்டன்று. வினையினீங்கி விளங்கிய வறிவினையுடையவனாகிய முனைவன் முதலுமீறுமிலா முதல்வனாய், எங்குமுள்ள உயிர்கட்கெல்லா மிறைவனாய், ஒப்புவமையிலனாய் அழுக்கற்றவனாய், வடிவு, வடி வின்மை, வடிவின்மையுண்மை இலனாகி, அறிவுக் கறிவாகி, எங்கு நிறைகின்ற பொருளாகி, உயிர்கட் குயிராகி விளங்குபவனவன். உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவனும், நிலவுலாவிய நீர்மலி வேணியனும், அலகில் சோதியனும், அம்பலத்தாடுவானும் ஆகிய அறவாழியந்தணன் பிறப்பு இறப்புற்றுழலும் எவ் வுயிர்களுக்கும் இரங்கி இன்பம் புணர்த்த வேண்டி நிறையருளான் ஐந்தொழிலும் ஆற்றும் அண்ண லாவான். அப்பரம் பொருளுக்கு ஐந்தொழில்களும், உயிர்கட்குத் துன்பம் போக்க நினைந்திடும் அறிவும், இறைமையும் வேறொருவர் கொடுப்ப வந்தன வல்லவாம்.

(வரும்)

# Sivaprakasam

(Sri. K. Subramania Pillai, M. A., M. L.)

## Benedictory Verse.

Enlightened and free from thoughts of stern Karma shall become the hearts of the votaries who never forget to strew behumming blooms everyday at the heroic feet of the Elephant Deity whose sacred form is Light Spiritual and who comes forth pouring out the must of divine wisdom and dispensing supreme delight (to fit souls).

## The verse in praise of Dancing Siva,

On our head and heart we shall get impressed and cherish the beautiful lotus feet of Him who is the source of the primordial rising delight, whose form is grace and wisdom, whose spreading tresses are the seat of the honey smelling flowers of Konrai, the crescent moon, the river Ganga and the glistening serpent and who with intent to lift us from the endless chain of births, dances in the Common Hall of all souls to the applanding tunes of angels and feasting the eye of Uma the protector of all the worlds.

## Verse to Goddess Sivagami.

On our head shall we receive the gracious feet-flower of the Mother who is the all-pervading supernal power; the First cause of all, the grace wisdom and energy of the Supreme Being, the form of Divine Mercy bestowing the frame of supreme bliss, the energiser of the pure and impure Maya from which are evolved the expansive

basic substrata of all sorts of bodies, minds worlds, and substances; the many sided one holy energy of God which is the seed of five grand functions of His and the eye-witness of the divine dance in the Gem Hall meant for annulling the woes of the World.

## Verse to God Ganesa.

With a view to this work being of good use and free from faults of metre and grammar in great Tamil and its unhindered completion we shall contemplate the pair of holy feet resembling the lotus blossoming in grace to the pious song of the bee-like saints, of the Elephant faced Deity who is the Lord of the hierarchy of gods and whose three-fold must of wisdom gushes forth' like a water fall and who was begotten by God Siva on his consort whose fish-like eyes surpassing a pair of lances in beauty and adorned by red lines leap up as if in fight to the sparkling leaf-like ring-jewels of the ear.

## Verse to God Muruga.

We shall meditate on the two feet of God Muruga who is the Commander of high born Davas of abiding opulence; the divine child of grace and wisdom riding the blue peacock, the spiritual guru of St. Agastiya, well versed in countless sciences, scriptures and their branches, the hero who willed to fling his brilliant spear and cut in two the breast of Sura unmindful of his prowess, the hill of Krounja and my misery, and the lover who hugged the beautiful bosom of the hunter-lady brimming with fragrant paste.

# நீதிநெறி விளக்கம்

குமரகுருபரரால் அருளிச்செய்யப்பட்டதும், திருக்குறளின் சாரமாகத் திகழ்வதுமான இந்நூல் தமிழ்க் கல்வி யுடையாரும் ஆங்கிலக் கல்வி யுடையாரும் ஒருங்கு பயன்படுத்திக் கொள்ளுந் தகைமைத்தாய் வெளிவந்துள்ளது. தருமபுர ஆதீன வித்துவான் திரு. காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை B.A., அவர்கள் பதவுரை, உரை நடை, கருத்துரை முதலியன எழுதி, பிறர்கூறும் கருத்துக்களையும் ஆங்கில மொழிபெயர்ப்புக்களையும் சேர்த்துள்ளார்கள். இலக்கணம், ஸ்ரீமத் முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திரு. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள், புதுவை. சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள், பண்டிதமணி, திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M. A., M. L., முதலாகிய பல சைவப் பேரறிஞர்களுடைய அணிந்துரைகள் கொண்டன.

காலிகோ பயிண்டு விலை அணா 8. தபாற்கூலி ரூ. 0–4–3.

கிடைக்குமிடம்:— நூல்நிலையப்பரிசோதகர்,
தருமபுர ஆதீனம்
தருமபுரம், மாயவரம் P. O.

## திருநாரையூர்ச் சிவாலயத்தில்

# ஸ்ரீ சேக்கிழார், சந்தானுசாரியர்கள் பிரதிட்டை

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் 2.. வது அருட் குரவர்களாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞான சம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்கள் முற்கூறியவாறு தங்கள் ஆதீனத்துக்குச் சொந்தமான தேவஸ்தானங்களெல்லாவற்றையும் புதுக்கித் திருப்பணி கும்பாபிஷேகம் முதலியன செய்வித்து, செம்மைபெறப் பரிபாலனஞ் செய்தருளுதல் போலவே, சைவத் தெய்வத் திருமுறைகளைச் சைவமக்கள் யாவருக்கும் எளிதில் கிடைக்கும் வண்ணம் வெளிப்படுத்தியருளிய ஸ்ரீநம்பியாண்டார் நம்பிகள் அவதாரஞ்செய்தருளிய திருநாரையூர்ச் சிவாலயத்தில் புதிதாகவே ஆலயமமைப்பித்து ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகளையும்,

ஸ்ரீ மெய்கண்டதேவ சிவாசாரியார், ஸ்ரீ அருணந்திதேவ சிவாசாரியார், ஸ்ரீ மறைஞானசம்பந்த சிவாசாரியார், ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் என்னும் சந்தானாசாரியர்களையும் பிரதிட்டை செய்வித்தருளி, திருநாரையூர்த் தலவரலாறு என்னும் புத்தகத்தையும் ஆதீனச் செலவிலேயே அச்சிடுவித் துதவியருளினார்கள்.

மேலும் கும்பாபிஷேகத்தன்று நடைபெற்ற சொற்பொழிவுகளிலும், தமிழ்வேத பாராயணத்திலும், ஆதீன அடியார்குழாங்களில் ஒருவராகிய (மேலக்கோட்டை மௌனமடம் கட்டளை) ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளும், ஆதீனச் சைவப்பிரசாரகர்களும், ஆதீன ஓதுவாமூர்த்திகளும், ஆதீனத் தேவாரப் பாடசாலை ஆசிரியர், மாணவர்களும் கலந்துகொண்டு தொண்டாற்றினார்கள்.


உ

## "ஞானசம்பந்தம்"

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் தமிழ்த் திங்கள் வெளியீடு.**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச்சார்பாய் எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் முழு உண்மைகளை உணர்வதற்கும் தமிழறிவைப் பெறுதற்கும் பெருந்துணையாவது.

### ஆண்டுக் கையொப்பம்

| | |
|---|---|
| உள்நாடு (இந்தியா, இலங்கை) அஞ்சற்கூலியுள்பட | ரூ. 1—8—0 |
| வெளிநாடு ... ... ... ... | ரூ. 2—0—0 |

குறிப்பு: தனிப்பிரதி கிடையாது. ஓராண்டிற்குக் குறைந்த கையொப்பம் இல்லை.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
ஷண்முகவிலாசம்,
தருமபுரம், மாயவரம்.



**Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adheenam at The Gnanasambandam Press, Dharmapuram. (Mayavaram).**

உ

குருபாதம்

## திருவஞ்சைக்களம் சுந்தரர், சேரர் குருபூஜைத் திருவிழா.

சென்ற 8-ஆண்டுகளாக நடைபெற்ற வழக்கம்போல் இவ்வாண்டிலும் இத்திருவிழா ஆடித் திங்கள் உ௩-ம் நாள் (8—8—'43) திங்கட்கிழமை கொச்சிசீமை திருவஞ்சைக்களத்தில் மிகச் சிறப்பாக நடைபெறும். அத்திருவிழாப் பணிசெய்யும் கோவை நகர் சேக்கிழார் திருக்கூட்டத்தார்கள் (6—8—'43) வெள்ளிக்கிழமை இரவு போத்தனூரிலிருந்து புறப்பட்டுச் செறுவண்ணூர்-இருஞாலக்குடா இரயில் நிலையங்களின் வழியாக (7—8—'43) சனிக்கிழமை திருவஞ்சைக்களத்திற்குப் போய்ச்சேர்வார்கள். அன்பர்கள் யாவரும் வந்து சிறப்பிக்குமாறு வேண்டப்பெறுகின்றார்கள். அப்பக்கங்களில் அதிக மழைக்காலமானபடியால் அன்பர்கள் யாவரும் அதற்குரிய உடை, குடை முதலிய வசதிகளுடன் வருதல் நலம். இருஞாலக்குடா இரயில் நிலயத்திலிருந்து மோட்டாரில் 12-நாழிகை அளவும் அதன்பின் தோணியின் வழியாக 2-நாழிகை அளவுஞ் சென்றால் திருவஞ்சைக்களத்தை யடையலாம்.

கோவை,
17—7—43. } **சேக்கிழார் திருக்கூட்டத்தார்கள்.**


உ

## "ஞானசம்பந்தம்"

**அ[illegible] சுட்டுக்களுடன் வெளிவரும் தமிழ்த் திங்கள் வெளியீடு.**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச்சார்பாய் எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் முழு உண்மைகளை உணர்வதற்கும் அறிவைப் பெறுதற்கும் பெருந்துணையானது.

**ஆண்டுக் கையொப்பம்**

உள்நாடு (இந்தியா, இலங்கை) அஞ்சற்கூலியுள்பட ... ரூ. 1—8—0
வெளிநாடு ... ... ... ரூ. 2—0—0

குறிப்பு:— தனிப்பிரதி கிடையாது. ஓராண்டிற்குக் குறைந்த கையொப்பம் இல்லை.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
சண்முகவிலாசம்,
தருமபுரம், மாயவரம்.



**Printed & Published b[redacted]daresa Iyer, Agent, Dharmapuram Adheena at The Gnanasambandam Press, Dharmapuram. (Mayavaram).**